05.10.2023

அ.வ.எண். 26/2018

ஆகஸ்தி லிங்கம் (P.W.1)

குறுக்கு விசாரணை :

1. 2018-ஆம் வருடம் நான் வேர்கிளம்பி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்தேனா என்றால் இல்லை. நான் எந்த வருடத்திலிருந்து மேற்படி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் 11.02.2023-ஆம் தேதியில் இருந்து பணி புரிந்து வருகிறேன். நான் 2023-ஆம் வருடம் தான் மேற்படி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து வருவதால் 2018 ஆம் வருடத்தில் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு பற்றி எனக்கு சரிவர தெரியாது என்று சொன்னால் கோப்புகளை படித்துள்ளேன் விவரம் தெரியும். இவ்வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பிரதிவாதி முன்னாள் இராணுவத்தினர் என்பதால் அவருக்கு கட்டிட வரி கட்டுவதிலிருந்து விலக்கு கேட்டும் அதனால் வரி செலுத்தாததால் அவர் கட்ட வேண்டி வரியை கட்டவேண்டிய வகைக்காக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி வீடு கட்டுவதற்கு அனுமதி எண்.54/2011-2012 என்ற 01.06.2011-ஆம் தேதி வழங்கிய கட்டிட வரைபட அனுமதியின் நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை.

2. மேற்படி அனுமதி 01.06.2011 முதல் 31.05.2014 வரை அமலில் இருந்தது என்று சொன்னால் சரிதான். மேற்படி அனுமதியின் படி நாங்கள் பிரதிவாதிக்கு வீடு கட்ட அனுமதி வழங்கவில்லை என்றாலும் அதனால் தான் மேற்படி அனுமதியின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வரிவிதிப்பு நடைமுறைக்காக வேர்கிளம்பி பேரூராட்சி ஏ முதல் சி மண்டலம் என பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விவரத்தை எங்கள் வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி கட்டியுள்ள வீடானது ஏ மண்டலத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி விவரத்தையும் வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். பேரூராட்சிக்கு வரிவிதிப்பு ஆண்டானது ஏப்ரல் 1 முதல் அடுத்த வருடம் மார்ச் 31-ஆம் தேதி வரை கணக்கிடப்படும் என்றால் சரியல்ல வருடத்திற்கு 2 முறை வரிவிதிப்பு செய்யப்படும். மேற்படி வரி விதிப்பானது தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டப்படி தான் வரி விதிக்கப்படுகிறது என்றால் சரிதான்.

3. மேற்படி சட்டப்படி 6 மாதத்திற்கு ஒருமுறை வரி விதிக்க வேண்டும் என்ற விதி எதுவும் இல்லை என்றால் சரியல்ல உள்ளது. அவ்வாறெனில் எந்த விதி என்று குறிப்பாக சொல்ல முடியுமா என்றால் தற்போது ஞாபகமில்லை. வேர்கிளம்பி பேரூராட்சி ஏ மண்டலத்திற்கு உட்பட்ட இடத்தில் உள்ள வீடுகளுக்கு 1 சதுர அடிக்கு 70 பைசா என்ற கணக்கில் கட்டிட வரி கணக்கிடப்படும் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை எங்கள் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வரியை கணக்கிடும்போது மொத்த சதுர அடி X 70 பைசா என்று கணக்கிடபடும் என்று சொன்னால் சரியல்ல மொத்த சதுர அடி மற்றும் நிலத்தின் மதிப்பு ஆகியவை கணக்கிடப்படும். மேற்படி நான் கூறியவாறு தான் கட்டிட வரி விதிக்க வேண்டும் என்று ஏதாவது விதி உள்ளதா என்றால் உள்ளது . மேற்படி விதி என்னவென்று குறிப்பாக கூற முடியுமா என்றால் ஞாபகமில்லை. பிரதிவாதியின் வீட்டின் மொத்த சதுர அடி 1980 என்பதால் வருடத்திற்கு 1980 X 70 பைசா என்று கணக்கிடும்போது மொத்தம் ரூபாய். 1386 தான் வரும் என்றால் சரியல்ல 6 மாதத்திற்கு ரூபாய்.1678 என வரும்.

4. மேற்படி 6 மாதத்திற்கு ரூபாய்.1678 எவ்வாறு வரும் என்று என்னால் கூற முடியாது என்று சொன்னால் வரி விதிப்புக்கான கண்க்கீட்டை பார்த்து தான் கூற முடியும். எங்கள் அலுவலகத்திலிருந்து பிரதிவாதிக்கு வரி விதிப்பு கேட்பு அறிவிப்பு அனுப்பிய தேதியை கூற முடியுமா என்றால் 15.12.2016 ஆகும். நான் சொல்வது பொய் என்றாலும் 15.12.2016 அன்று பிரதிவாதிக்கு எவ்வித அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. மேற்படி 15.12.2016 அன்று அனுப்பிய அறிவிப்பை தவிர வேறு அறிவிப்பு எதுவும் பிரதிவாதிக்கு எங்கள் அலுவலகத்தில் இருந்து அனுப்பினோமா என்றால் இல்லை. நான் சொல்வது பொய் என்றால் வரி விதிப்பு கேட்பு அறிவிப்பு எண்.12 -ஐ கடந்த 17.04.2014 அன்று ஒரு அறிவிப்பு பிரதிவாதிக்கு அனுப்பினோம் என்றால் மேற்படி தேதியிட்ட அறிவிப்பு சிறப்பு அறிவிப்பு ஆகும். பொதுவாக முதல் முறையாக அனுப்பபடும் வரி கேட்பு அறிவிப்பு தான் சிறப்பு அறிவிப்பா அல்லது 2-வது முறை அனுப்பபடும் அறிவிப்பு சிறப்பு அறிவிப்பா என்றால் முதல் முறை அனுப்பபடும் அறிவிப்பு தான் சிறப்பு அறிவிப்பாகும். மேலும் பிரதிவாதிக்கு முதல்முறை அனுப்பிய அறிவிப்புக்கு பிரதிவாதி வரியை கட்டிவிட்டார். 2-வது அறிவிப்பானது வரி நிலுவைக்காக அனுப்பப்பட்டது. நான் சொல்வது தவறு என்றாலும் வரி

நிலுவைக்காக 2-வது அறிவிப்பு அனுப்பபடவில்லை என்றாலும் நான் ஏற்கனவே 2-வது அறிவிப்பானது வரி கேட்பு அறிவிப்பு என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

5. மேற்படி கூறிய இரண்டு அறிவிப்புகளையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. முதல் முறையாக அனுப்பப்பட்ட அறிவிப்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2-வது முறையாக அனுப்பப்பட்ட அறிவிப்பு தாக்கல் செய்யப்படவில்லை. நான் சொல்வது பொய் என்றாலும் மேற்படி 2 அறிவிப்புகளையும் நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முதல் முறையாக அனுப்பப்பட்ட அறிவிப்பிற்கு பிரதிவாதி வரியை கட்டியுள்ளதால் முதல்முறை அனுப்பப்பட்ட அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 2-வது முறையாக அனுப்பப்பட்ட அறிவிப்பிற்கு வரி செலுத்தவில்லை என்பதால் 2-வது முறை அனுப்பப்பட்ட அறிவிப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அனுப்பிய 2 வரி கேட்பு அறிவிப்பானதும் சட்டத்திற்கு புறம்பானது என்பதால் தான் மேற்படி 2 அறிவிப்பையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே கூறிய சிறப்பு அறிவிப்பானது எந்த சட்டத்தின் கீழ் அனுப்பப்பட்டது என்றால் நகராட்சி சட்டத்தின் கீழ் அனுப்பப்பட்டது.

6. நாங்கள் கூறும் சிறப்பு அறிவிப்பானது ஒரு சிறப்பு அறிவிப்பே கிடையாது என்றாலும் ஆனால் சிறப்பு அறிவிப்பு என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 15.12.2016 அனுப்பிய அறிவிப்பு தான் முதல் அறிவிப்பு என்று கூறியுள்ளோமா என்றால் 15.12.2016 அனுப்பிய அறிவிப்பிற்கு பிரதிவாதி வரி கட்டவில்லை என்பதால் மேற்படி தேதியிட்ட அறிவிப்பு தான் முதல் அறிவிப்பு என்று கூறியுள்ளோம். 17.04.2014 அன்று வாதி பிரதிவாதியின் வீட்டிற்கு சென்று பிரதிவாதியின் வீட்டிற்கு வரி விதிப்பு எண்.5718-இன் படி ரூபாய்.1678 விதிக்கப்பட்டுள்ளது என்று கூறியதால் பிரதிவாதி மேற்படி வரியை கட்டினாரா அல்லது அறிவிப்பு அனுப்பப்பட்ட மேற்படி வரி தொகையை பிரதிவாதி கட்டினாரா என்றால் பிரதிவாதி நேரடியாக அலுவலகத்திற்கு கட்டி விட்டார். மேற்படி விவரத்தை வழக்குரையில் கூறியுள்ளோமா என்றால் இல்லை நிலுவை தொகையை பற்றி மட்டும் தான் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கட்டிய தொகையை பொறுத்து தேவையில்லை என்பதால் வழக்குரையில் கூறவில்லை.

7. பேரூராட்சியில் வரி விதிப்பு பதிவேடு என்ற ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான். அதைபோன்று வரி விதிப்புக்கு X மற்றும் Y என்ற வரி விதிப்பு கணக்கீட்டு படிவம் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றால் சரிதான். மேற்படி 2 ஆவணங்களும் வரி விதிப்பை காட்டக்கூடிய ஆவணம் என்றால் பழைய வீட்டிற்கு வரி கணக்கிட பயன்படுத்தப்படும் படிவங்களாகும். நான் சொல்வது தவறு என்றாலும் வழக்கு வீட்டிற்கும் மேற்படி படிவங்கள் மூலம் தான் வரி விதிக்கப்படுகிறது என்றால் சரியல்ல பிரதிவாதியின் வீடு புது வீடு என்பதால் மேற்படி X மற்றும் Y என்ற வரி விதிப்பு படிவம் பிரதிவாதியின் வீட்டிற்கு பயன்படுத்தப்படாது. எந்த வருடத்திற்கு முன்பு X மற்றும் Y என்ற படிவம் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றால் சீராய்வு செய்து முடித்த வருடத்திற்கும் அடுத்து வரும் 10 வருடத்திற்கும் இடையே வரும் வருடங்களுக்கு X மற்றும் Y படிவம் வராது. பின்னர் 10 வருடம் கழித்து சீராய்வு செய்யும்போது ஏற்கனவே இடைபட்ட வருடங்களான 10 வருடங்களுக்கும் சேர்த்து அடுத்து சீராய்வு செய்யப்படும் வருடத்தில் சீராய்வு செய்யப்படாத வருடங்களுக்கு X மற்றும் Y படிவம் கொடுக்கப்படும்.

8. அவ்வாறெனில் சீராய்வு செய்யப்படும் வருடத்தில் ஏற்கனவே சீராய்வு செய்யப்படாத 10 வருடங்களில் ஒரு வீடு கட்டப்பட்டிருக்கும்போது அது பழைய வீடாகும். அப்பொழுது சீராய்வு செய்யப்படும் வருடத்தில் மேற்படி பழைய வீட்டிற்கு வரி விதிக்கும்போது அடிப்படை வரியிலிருந்து 10 சதவீதத்தை கழித்துக்கொண்டு வரி விதிக்கப்படும் என்றால் சரியல்ல அரசு உத்தரவிற்கு வரி விதிக்கப்படும். நான் சொல்வது தவறு என்றாலும் அரசு அவ்வாறான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படாது என்றாலும் அது பற்றி சட்டத்தில் ஏற்கனவே உள்ளது என்றால் சரியல்ல. ஒரு வீடு கட்டியவுடன் வரி விதிக்கும்போதே X மற்றும் Y என்ற படிவம் கொடுக்கப்படும் என்றாலும் நான் ஏற்கனவே கூறியது போன்று ஒரு வீடு கட்டி 10 வருடம் கழிந்த பின்பு தான் X மற்றும் Y என்ற படிவம் கொடுக்கப்படும் என்றால் சரியல்ல. மேலும் சீராய்வு என்பது 10 வருடத்திற்கு ஒரு முறை யோ அல்லது அதற்கு மேற்ப்பட்ட காலமோ சீராய்வு செய்யப்படும் காலமாக நிர்ணயம் செய்யப்படலாம். மேற்படி வரி விதிப்பு பதிவேடு மற்றும் X மற்றும் Y என்ற படிவம் இரண்டையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9. பிரதிவாதிக்கு விதிக்கப்பட்ட வரி விதிப்பில் முறைகேடு இருப்பதால் தான் மேற்படி 2 ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் வீட்டிற்கு ஒரு வருடத்திற்கு வரி ரூபாய்.1386 என்றாலும் ஆனால் நாங்கள் ரூபாய்.1678 என கூடுதலாக 292 நிர்ணயிக்கப்பட்ட போதும் பிரதிவாதி பிரச்சனை எதுவும் வேண்டாம் என்று நாங்கள் நிர்ணயித்த வரியை 21.05.2014 அன்று செலுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. ஏனென்றால் நூலக வரி மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றிற்கும் சேர்த்து தான் வரி விதிக்கப்பட்டது. மேற்படி நூலக வரி மற்றும் திடக்கழிவு மேலாண்மை வரி என்பது அடிப்படை வரியான ரூபாய்.1386-இல் 9.5 சதவீதம் என்று சொன்னால் சரியல்ல. நூலக வரி 10 சதவீதம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை வரி மாதத்திற்கு 5 ரூபாய் என 6 மாதத்திற்கு என கணக்கிட்டு கட்டிட வரி வசூலிக்கப்படும். மேற்படி கூறியவாறு தான் கட்டிட வரி வசூலிக்கப்படுவதாக வழக்குரையில் கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

10. மேற்படி அடிப்படை வரியான ரூபாய்.1386-இல் 9.5 சதவீதத்தில் நூலக வரி, பொது சுகாதாரம், தெருவிளக்கு, வடிகால் விஸ்தரிப்பு, தண்ணீர் வினியோகம் மற்றும் அத்தியவாசிய தேவைகளுக்காக 9.5 சதவீதம் தான் மேற்படி அடிப்படை வரியில் நிர்ணயம் செய்யப்படுகிறது என்றால் சரியல்ல. அடிப்படை வரியில் மேற்படி 9.5 சதவீத வரி பிற காரியங்களுக்காக வசூலிக்கப்படுவது குறித்து வழக்குரையில் கூறப்படாததால் மேற்படி 9.5 சதவீத வரியை பொறுத்து நாங்கள் பரிகாரம் பெற உரியவர்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. வேர்கிளம்பி பேரூராட்சி அலுவலகம் அமைந்துள்ள இடம் குமரன்குடி கிராமத்திற்கு உட்பட்டது என்று சொன்னால் சரியல்ல மேக்கோடு கிராமத்திற்கு உட்பட்டது. நான் சொல்வது தவறு என்றாலும் 2012-ஆம் வருடம் பேரூராட்சி அமைந்துள்ள இடம் குமரன்குடி கிராமத்திற்கு உட்பட்ட இடம் தான் என்று அரசிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல ஆவணப்படி மேக்கோடு கிராமத்திற்கு உட்பட்டது தான் என்று உள்ளது.

11. பிரதிவாதி வரி கட்டி சுமார் 2 வருடம் கழித்து பிரதிவாதி கட்ட வேண்டிய வரியாக ரூபாய். 3356 என தவறாக நிர்ணயம் செய்துள்ளதால் அதை பெற நாங்கள் தகுதியுடையவர்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் அனுப்பிய 2-வது வரி விதிப்பு கேட்பு அறிவிப்பான எண்.46/2016 என்ற அறிவிப்புக்கு பிரதிவாதி

அனுப்பியது தான் வா.சா.ஆ.1 என்று சொன்னால் சரிதான். 19.03.2016 தேதியிட்ட பிரதிவாதி அனுப்பிய அறிவிப்புக்கு 30.03.2016 தேதியிட்ட பதில் அறிவிப்பு தான் வாதி அனுப்பியது என்றால் சரிதான். வீடு கட்டி முடித்து 5 வருடம் கழித்து வரி நிர்ணயம் செய்தால் அடிப்படை வரியில் 10 சதவீதம் கழிக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வீட்டுவரி செலுத்தி 4 ஆண்டுகள் கழித்து வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் பிரதிவாதி வீட்டு வரி கட்ட பல கோரிக்கைகள் வைத்தார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வரி கட்டுவதற்கு முன்பாக பல கோரிக்கைகள் வைத்தார் என்று பொய்யாக சொல்லியுள்ளோம் என்றாலும் ஆனால் பிரதிவாதி செலுத்திய வீட்டு வரிக்கு பணியாளர்களிடம் ரசீது கேட்டபோது செயலாளரை பார்த்தால் தான் ரசீது கொடுப்போம் என்று நீங்கள் தான் பிரதிவாதியிடம் கோரிக்கை வைத்தீர்கள் என்றால் சரியல்ல.

12. மேற்படி கூறியவாறு வாதி தரப்பில் கூறியதுபோன்று பிரதிவாதி செயலாளரை பார்த்து கவனிக்காததால் தான் இந்த வழக்கை 4 ஆண்டுகளுக்கு பிறகு பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு விதிக்கப்பட்ட வரி விதிப்பில் உள்ள முறைகேடை சரி செய்வதற்கு முன்பு இந்த வழக்கை தாக்கல் செய்ய எவ்வித முகாந்திரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆகையால் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கதக்கது அல்ல என்றாலும் எனவே வழக்கு பிரதிவாதியின் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. மேலும் வழக்குமூலம் எந்த தேதியில் ஆரம்பித்தது என்று வழக்குரையில் கூறவில்லை என்பதால் மேற்படி காரணத்தினாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. மேலும் வழக்கில் சரியான விதியின் கீழ் முத்திரை கட்டணம் கட்டாததாலும் மேலும் சரியான சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யாததாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

13. மேலும் பிரதிவாதியிடம் இருந்து அதிக வரி வசூலிக்கும் நோக்கத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அதன் அடிப்படையிலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி பஞ்சாயத்து தலைவரிடம் அதிக வரி நிர்ணயம் செய்யப்பட்டதற்கு எதிராக 19.03.2016 அன்று மேல்முறையீடு செய்து நிலுவையில் இருந்து வருவதால் இவ்வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால்

சரியல்ல. வரி முறைகேடு குறித்து வாதிக்கு நன்றாக தெரியும் என்பதால் தான் அது சம்மந்தமான ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பதால் வழக்கு பிரதிவாதியின் இழப்பீட்டு செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. மேலும் பிரதிவாதியின் மகன் வரி விதிப்பு விலக்கு கேட்டு அரசுக்கு அனுப்பிய மனுவிற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.